இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 30.12.2025

# போற்றப்படும் கட்டடக் கலை!

**திராவிட முன்னேற்றக் கழக அரசின் கலைத் தொண்டுக்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் 133 அடியில் திருவள்ளுவருக்குச் சிலை, பூம்புகார் கோட்டம் என முத்தமிழறிஞர் கலைஞர் தம் ஆட்சியில் எத்தனையோ கலைப் படைப்புகளை உருவாக்கினார்.**

அந்த வரிசையில் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் ஏராளமான கலைப் படைப்புகளை உருவாக்கி வருகிறார்.

**சென்னை கடற்கரையில் கலைஞர் உலகம், வள்ளுவர் கோட்டம் புதுப்பிப்பு, குமரி வள்ளுவர் சிலையில் கண்ணாடிப் பாலம், மதுரைக்கு அருகில் கீழடி அருங்காட்சியகம், திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம், மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம், மதுரையில் மாபெரும் கலைஞர் நூலகம் ஆகியவை இன்றைய முதலமைச்சர் அவர்களின் கலை உள்ளத்துக்கு சாட்சியாக அமைந்துள்ளன.**

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் உலகெங்கிலும் இருந்து வந்து பார்த்துள்ளார்கள்.

திருநெல்வேலியில் 55,000 சதுர அடியில் பாரம்பரிய வடிவமைப்போடும், அதிநவீன தொழில்நுட்பங்களோடும் பொருநை அருங்காட்சியம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. பொருநை ஆற்றங்கரை அகழாய்வுகளில் கிடைத்த அரிய தொல்பொருட்கள் இங்கு அழகுற காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசியாவிலேயே மாடு பிடிவிளையாட்டுக்கான முதல் அரங்கமாக மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் கம்பீரமாக நிற்கிறது. 66.80 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த இடத்தில் 16 ஏக்கரில் அரங்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.ஒரே நேரத்தில் 4,500 பேர் உள்ளே அமர்ந்து பார்க்கலாம்.62.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

சென்னை கதீட்ரல் சாலையில் செங்காந்தள் பூங்காவுக்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 46 கோடியில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.வைக்கத்தில் 8 கோடி மதிப்பீட்டில் தந்தை பெரியார் நினைவகத்தை எழுப்பினார் முதலமைச்சர்.

தமிழர்களின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகங்களைத் தொடர்ந்து கங்கைகொண்ட சோழபுரத்தில் புதிய அருங்காட்சியகம் 10 ஏக்கர் பரப்பில் 22 கோடி மதிப்பீட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தஞ்சையில் உள்ள மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபம் மேம்படுத்தி பொலிவூட்டப்படும் என்பதையும் அறிவித்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை விக்டோரியா அரங்கம் அதன் பழமை மாறாமல் மீண்டும் கட்டமைக்கப்பட்டு உள்ளது.

விக்டோரியா பொது அரங்கம், சென்னையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களில் ஒன்று. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூரும் வகையிலும் அமைக்கப்பட்டது. ராபர்ட் சி சோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் 1887-ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டு, நம் பெருமாள் என்பவரால் இந்த அரங்கம் கட்டப்பட்டது. கலை அரங்கமாக, அரசியல் அரங்கமாகச் செயல்பட்ட இடம் இது. தமிழ் நாடகங்கள், இசை அரங்கேற்றங்கள் நடந்துள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் பல்வேறு தலைவர்கள் உரையாற்றிய இடம் இது.

நீதிக்கட்சிக் காலத்துச் செயல்பாடுகளுக்கு இது அடித்தளமாக அமைந்தது. நீதிக்கட்சியின் தொடக்கவிழா இங்கு தான் நடந்தது. நீதிக்கட்சித் தலைவரான டி.எம்.நாயர் தனது முக்கியான சில உரைகளை இங்கு ஆற்றி இருக்கிறார். அவரது தொடக்க கால உரைகளே சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்தன என்று திராவிடர் கழகத் துணைத்தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.இதே விக்டோரியா பப்ளிக் ஹாலில் 9.9.1934 அன்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இயற்றிய “இரணியன் அல்லது இணையற்ற வீரன்” என்ற நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தந்தை பெரியார் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசினார் என்றும் சொல்லி இருக்கிறார் அவர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டார். பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 32.62 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கும் பணி 20.03.2023 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்தாலிய பாணி கோபுரத்தின் உச்சியில் திருவிதாங்கூர் கூரையுடன், செந்நிற சீன செராமிக் கற்களால் கட்டப்பட்ட மூன்றடுக்கு மன்றம் இது. **விக்டோரியா அரங்கம் மீண்டும் பரபரப்பான இடமாக மாறி உள்ளது. இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், கவிதை வாசிப்பு, உரைகள் போன்ற நிகழ்வுகளை இங்கு நடத்தலாம். கட்டிடத்தின் முன்புறத்தில், ஒரு காலத்தில் சென்னையில் பரவலாக பயன்படுத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா, டிராம், படகுகள் ஆகியவற்றின் மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளன. கீழடி அருங்காட்சியகம் நினைவூட்டப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசானது அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியை மட்டுமல்ல; கலை வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காற்றி வருகிறது. பழமை மாறாமல் புதுப்பித்தல் என்பது அசல் வடிவமைப்பை மாற்றாமல் புதுப்பித்தல் ஆகும். இதற்காக தமிழ்நாடு அரசு நிதி உதவி வழங்கி வருவது கட்டடக் கலைக்குச் செய்யப்படும் சிறப்பு ஆகும். பழமை மாறாமல் புதுப்பிக்க 150 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. திராவிட மாடல் அரசானது கட்டடக் கலையைப் போற்றும் அரசாகவும் செயல்பட்டு வருகிறது.**

●●

## தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள்!

# இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த துரித நடவடிக்கை மேற்கொள்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, டிச. 30 -**

**இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதைத் தடுக்கவும், சிறை பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக நேற்று முன்தினம் (28.12.2025) இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதை தடுக்கவும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்றுமுன்தினம் (28.12.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 27.12.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கை கடற்படையினர் நேற்றுமுன்தினம் (28.12.2025) கைது செய்த மற்றொரு சம்பவத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுவது தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவதாக கவலையுடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இக்கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடிப் படகுகளும், 61 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் இது போன்ற கைது சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும், இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் – குடிமைத் தேர்வுகளில்

# ‘நான் முதல்வன்’ திட்டத்தால் இலக்குகளை எளிதில் ஈட்டி இளைஞர்கள் படிப்படியாக வெற்றி குவிக்கின்றனர்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச.30 -

தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ் நாட்டுப் போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கான ஒரு புதிய சூழலில் கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாக, இந்தியாவின் சமூக வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. கல்வியும் வாய்ப்புகளும் ஒரு சிலருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையின் மீதே மாநிலத்தின் இந்த முன்னேற்றம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்தத்துவம் தலைமுறை பலவற்றை வறுமையிலிருந்து மீட்டெடுத்ததுடன், எழுத்தறிவை விரிவுபடுத்தி, இந்தியாவில் சமூக ரீதியாக மிகவும் முன்னேறிய சமூகங்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டை மாற்றியது.

இருப்பினும், 2017ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு கசப்பான உண்மை வெளிவரத் தொடங்கியது: தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில், குறிப்பாக ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டின் பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து வந்தன. இதற்குத் தரமான பயிற்சி பெறுவதில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், அதிகப்படியான நிதிச் சுமைகள், போட்டித் தேர்வுகளுக்கு வழிகாட்டத் தேவைப்படும் முறையான கட்டமைப்பு வசதிகள் இல்லாததுமே முக்கியக் காரணங்களாக அமைந்தன. குறிப்பாக, பெருநகரங்களுக்கு வெளியே கிராமங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு முறையான வழிகாட்டல் கிடைக்கவில்லை. இதனால், 2021ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 27 ஆக மிக மிகச் சரிந்தது.

திறமையான நிர்வாகிகளையும், சீர்திருத்தச் சிந்தனை கொண்ட அதிகாரிகளையும் உருவாக்கிய பெருமைமிக்கத் தமிழ்நாட்டிற்கு, இந்தச் சரிவு ஏமாற்றத்தை அளித்ததோடு மட்டுமல்லாமல், ஒரு உடனடி மாற்றத்திற்கான தேவையையும் உணர்த்தியது.

**நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் (NMCE): ஓர் எண்ணம் நிறுவனமாக உருவெடுத்த கதை**

இந்தச் சரிவைக் கண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் 2023 மார்ச் 7 அன்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் ‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு’ (NMCE) என்ற புதிய பிரிவை உருவாக்குமாறு எனக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்தத் திட்டம் ஒரு அலுவலகக் கூட்டத்தில் மட்டும் உருவானது அல்ல; பல்வேறு மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் நடத்திய உரையாடல்களின் விளைவாக உருவாக்கப்பட்டது. அவர்களில் பலர் கூறியது



ஒன்றே: “படிக்க வேண்டும் என்ற ஊக்கம் இருந்தது, ஆனால் தொடருவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இல்லை.”

‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு’ என்பது ஒரு குறுகிய கால மானிய உதவி அல்ல, அது ஒரு கட்டமைப்புச் சீர்திருத்தம். போட்டித் தேர்வுகளை எளிதில் அணுகக் கூடியதாகவும், குறைந்த செலவிலானதும், கட்டுப்படியாகக் கூடியதாகவும், இலட்சியக் கனவாகவும் மாற்றுவதே இதன் நோக்கம். சமூக நீதியின் முன்னோடியான தமிழ்நாடு, நவீன வேலை வாய்ப்புகளில் சம வாய்ப்பை உறுதி செய்வதிலும் முன்னோடியாக இருக்கும் என்ற நம்பிக்கையை இளைஞர்களிடையே மீட்டெடுப்பதே இதன் குறிக்கோள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான, ஒவ்வொரு மாணவரையும் முதல் தலைமுறை வெற்றியாளராக மாற்றும் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் ஒரு பகுதியாக இது செயல்படுகிறது.

**சமமற்ற சூழலுக்கான ஒரு கட்டமைக்கப்பட்ட தீர்வு**

சென்னை அல்லது டெல்லி போன்ற நகரங்களில் உள்ள மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி மையங்கள் எளிதில் கிடைத்தன. ஆனால், கடலூர் அல்லது திண்டுக்கல் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் போதிய பாடப் புத்தகங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் இன்றித் தவித்தனர். பல திறமையான மாணவர்கள் பயிற்சிச் செலவையோ அல்லது வெளியூர் சென்று தங்குவதற்கான செலவையோ ஏற்க முடியாமல் பாதியிலேயே படிப்பைக் கைவிட்டனர்.

இந்த ஏற்றத் தாழ்வைச் சரிசெய்ய ‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு’ மூன்று தூண்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது:

நிதிஉதவி தொழில் முறைப் பயிற்சி. தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சித் திட்டங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் உதவித் திட்டங்கள்.

2023-24ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஒன்றிய அரசுப் பணியாளர் ஆணையத்தின் குடிமைப் பணித் தேர்வு ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் 1,000 மாணவர்கள் வெளிப்படையான தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு முதல் நிலைத் தேர்வுக்குத் (Preliminary) தயாராக மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

முதன்மைத் தேர்வுக்குத் (Mains) தகுதி பெறுவோருக்கு ரூ.25,000 ஒருமுறை ஊக்கத் தொகையாகவும், 2025 முதல் நேர்முகத் தேர்வுக்குத் (Personality Test) தகுதி பெறுவோருக்கு ரூ.50,000 தொகையும் வழங்கிட திராவிட மாடல் அரசு முன் வந்து உதவிக்கரம் நீட்டியது. இதன் பின் மாணவர்கள் பங்கேற்பும், அரசின் உதவிகளும் ஊக்கப்படுத்தியதால் போட்டித் தேர்வு முடிவுகள் இத்திட்டத்தின் வெற்றியை உறுதிப் படுத்தியுள்ளன :

**2023-24 ஆம் ஆண்டில்**

453 மாணவர்கள் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றனர்.

**2024-25: ஆம் ஆண்டில்**

இந்தஎண்ணிக்கை 559 ஆக உயர்ந்தது. அவர்களில் 134 பேர் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, 50 பேர் இறுதிப் பட்டியலில் இடம் பெற்றனர்.

அவர்களில் ஒருவரான திரு.சிவச்சந்திரன் அகில இந்திய அளவில் 23 வது இடத்தைப் பிடித்து தமிழ்நாட்டில் முதலிடம் பெற்றார் .

**2025-26: ஆம் ஆண்டில்,**

659 பேர் முதல் நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 155 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர், இவர்களில் 87 பேர் திராவிட மாடல் அரசின் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தில் (AICSCC) பயிற்சி பெற்றவர்கள் என்பது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துடிப்பான தூய தமிழர் நேய உணர்வுக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றியாகும்.

இத்தகைய புள்ளி விவரங்களுக்கும் மேலாக வெற்றி என்பது ஒருவரது பொருளாதார நிலையைப் பொறுத்தது அல்ல, அவருடைய உழைப்பைப் பொறுத்தது என்ற நம்பிக்கையை இது மீட்டெடுத்துள்ளது, இது ஒரு சமூக மாற்றத்தின் சான்று.

‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு’ இன் உண்மையான வெற்றி அதன் புள்ளி விவரங்களில் இல்லை, அது ஏற்படுத்திய உளவியல் மாற்றத்தில் உள்ளது. இன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள் தேசியத் தேர்வுகளை எளிதில் எட்டிப் பிடிக்கக்கூடிய வெற்றி இலக்குகளாகப் பார்க்கின்றனர். சிறிய நகரங்களில் பரவிவரும் இந்தத் தன்னம்பிக்கையே இத்திட்டத்தின் மிகப்பெரிய வெற்றிக்குச் சீரிய சான்றாகும்.

**ஒரு ஏழை பீடித் தொழிலாளியின் மகள் ஐ.பி.எஸ் அதிகாரி ஆனார்!**

இந்த மகத்தான வெற்றிக்கு எடுத்துக்காட்டு தென்காசியைச் சேர்ந்த எஸ். இன்பா என்பவரின் கதை ஒரு சிறந்த உதாரணம். ஓய்வு பெற்ற பேருந்து நடத்துநர் மற்றும் பீடித் தொழிலாளியின் மகளான இவர், மாவட்ட நூலகத்தைத் தனது இரண்டாவது இல்லமாக மாற்றிக் கொண்டார்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் பயனாக, 2023ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற்று இவர் ஐபிஎஸ் (IPS) அதிகாரியாகத் தேர்வு செய்யப்பட்டார். இவருடைய வெற்றி தனிப்பட்ட ஒன்றல்ல; தடைகள் நீக்கப்பட்டால், சாதனைகளை நிகழ்த்தி மாற்றங்களைப் படைப்பவர்கள் தமிழர்கள் என்பதற்கான அடையாளம் ஆகும்.

**தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சி (Residential Coaching)**

குடிமைப் பணித் தேர்வுகளுக்கு அப்பால், ஒன்றிய அரசுப் பணித் தேர்வு SSC, இரயில்வே மற்றும் வங்கித் தேர்வுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் தங்குமிடம், உணவு மற்றும் பயிற்சி உள்ளிட்ட வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

முதல் ஆண்டில் பயிற்சி பெற்ற 510 மாணவர்களில், 80 பேர் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் இரயில்வே துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2025 அக்டோபரில் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் கூடுதல் வசதிகளுடன் தொடங்கப்படுகின்றன.

தர்மபுரியைச் சேர்ந்த கே.புவனேஸ்வரி என்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவி, இந்தத் திட்டத்தின் மூலம் பஞ்சாப் நேஷனல் வங்கியில் வேளாண் அதிகாரியாகப் (Agriculture Field Officer) பொறுப்பேற்றுள்ளார். வருமானமோ அல்லது இருப்பிடமோ ஒருவரின் வெற்றிக்குத் தடையல்ல என்பதை இது நிரூபிக்கிறது.

**வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நம்பிக்கை**

புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இத்திட்டத்தில் முழுமையான வெளிப் படைத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது: தகுதி அடிப்படையில் தேர்வு, நேரடியாக வங்கிக் கணக்கில் உதவித் தொகை, மற்றும் முறையான தணிக்கை ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு’ மூலம், தமிழ்நாடு ஒரு உள்ளடக்கிய மற்றும் தகுதி அடிப்படையிலான பொதுச் சேவைப் பாரம்பரியத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது. சிறந்து விளங்குவதும், சமத்துவத்தைப் பேணுவதும் ஒன்றிற் கொன்று முரணானவை அல்ல, மாறாக அவை ஒன்றை ஒன்று முழுமைப்படுத்துபவை என்ற செய்தியை இது உலகிற்குப் பறைசாற்றுகிறது!

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.